(ஈ) சென்னையில், மத்திய சிறைச்சாலைக்கருகில் ஏற்பட்ட பஸ் விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், ஏ. ஆர். மாரிமுத்து, ஓ. சுப்பிரமணியம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக கூறும்படி திரு. மு. அம்பிகாபதி அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சென்னையில் 29-3-1978-ம் தேதியன்று மத்திய சிறைச்சாலைக்கருகில் ஏற்பட்ட பஸ் விபத்தின் காரணமாக 9 பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பெற்றும், மற்றும் பலர் காயமடைந்துள்ளதுமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 29–3–78 அன்று காலை சுமார் 8 மணி அளவில் வடபழனியில் இருந்து புறப்பட்ட தடம் எண் 17 விரைவுப் பேருந்து சென்னை "Stanley v aduct" அருகே (மத்திய சிறைச்சாலை எதிரில்) பாலத்தின் வளைவில் செல்லும்போது கவிழ்ந்து விட்டது. ஓட்டுநர், நடத்துநர் உட்பட 20 பேர் காயமுற்றார்கள். காயமுற்ற பயணிகளில் 16 பேர் ஆண்கள், மற்றவர் பெண்கள் இந்த 20 நபர்களில் 13 பேர் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்றனர். ஏனையோர் சிகிச்சை பெற்று திரும்பினர். 31-3-78 அன்று நான்கு பேர் மட்டுமே மருத்துவ மனையில் தங்கி இருந்தார்கள். அவர்களில் மூவர் அரசு பொது மருத்துவ மனையிலும், ஒருவர் பெரம்பூர் இரயில்வே மருத்துவ மனையிலும், இருந்தனர். ஓட்டுநரின் வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. விபத்துக்குள்ளானோர் யாரும் கவலைக்கிடமான நிலையில் இல்லை.

விபத்தின் காரணம் பற்றி காவல் துறையினரும், பல்லவன் போக்குவரத்துக் கழக அதிகாரிகளும் விசாரணை செய்து வருகின்றனர். விபத்துக்குள்ளான பேருந்து போக்குவரத்துக் காவல் துறை அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது,

பொறியியல் நிபுணர்கள் கருத்துப்படி இந்த விபத்துக்கான காரணங்கள் :—

(1) சாலை மிக வளைவாகவும், அருகருகே மாற்று வளைவாகவும் இருப்பது.

(2) வளைவான பகுதியில், சாலையின் மட்டச்சரிவு (Super elevation) இல்லாமை.

(3) வளைவில் பாதுகாப்பாக செல்லக்கூடிய வேகத்தை மிஞ்சி பேருந்தை ஓட்டிச் சென்றது.

(4) திடீரென்று வண்டியின் தடையை உபயோகித்தது.

இம்மாதிரி விபத்துக்கள் மீண்டும் ஏற்படாதிருக்க சாலையில் போதிய மட்டச் சரிவு (Super elevation) கொடுப்பது பற்றியும் வளைவில் சாலையின் மத்தியில் பிரிவுத் தடுப்புகள் அமைப்பது பற்றியும், (Constiucting Medians along the Centre of the road) ''வேகக் கட்டுப்பாடு'', ''முந்தக்கூடாது'' போன்ற அறிவிப்புப் பலகைகள் பொருத்துவது பற்றியும் பரிசீலிக்க போக்குவரத்து காவல் துறையினரையும், சென்னை மாநகராட்சியையும் கேட்டுக் கொள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகம் உத்தேசித்துள்ளது.

[முற்பகல் 11-10]

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலை ஏற்றுக்கொள்கிறேன்.

சாலையிலே அரசு முறைப்படுத்த வேண்டிய சிலவற்றைப் பற்றிபரிசீலிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டிய அம்சம். இப்படிச் சில இடங்களிலே விபத்துக்கள் ஏற்படுவதால் பொதுத்துறையான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மீது வேறுவிதமான அபிப்ராயங்கள் ஏற்பட்டுவிடாத அளவுக்கு அரசு தக்க முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். வளைவு இருந்ததன் காரணமாகத்தான் விபத்து ஏற்பட்டது, ஓட்டுநரின் தவறு இல்லை என்று கூறினார்கள். அரசு இதைப் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரின் விருப்பப்படி தான் நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ, சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இப்போது பல இடங்களிலும் பஸ்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் சென்னையில் தான் அதிகமான அளவில் இந்த மாதிரி சேதங்கள் ஏற்படுகின்றன. அதற்கு ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணமா அல்லது வண்டிகள் பழுதான நிலையில் இருப்பது காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பொதுவாகச் சென்னையில் பேருந்துகள் அதிகம். எனவே விபத்துக்களும் சற்று அதிகமாகவே இருக்கின்றன.